# கற்பகம் திங்கள் இதழ்

KATPAKAM

விலை ரூபா 10/-

மலர்–03 ஒக்டோபர்–2010 இதழ்–36


**குறளமுதம்–36**

வள்ளுவர் வாய்மொழியை எத்திறத்தவரும் எளிதில் பொருளுணர்ந்து படிப்பதற்கு ஏதுவாக "கற்பகம்" தொடர்ந்து குறளமுதைத் தரும்.

அதிகாரம்–4 –அறத்துப்பால்–அறத்தின் இன்றியமையாமை

"அன்றுஅறிவாம் என்னாது அறம் செய்க மற்றுஅது
பொன்றுங்கால் பொன்றாத் துணை"

இளைஞராக உள்ளவர், பிற்காலத்தில் செய்வோம் என்று கடத்தாமல் இளமைதொட்டு அறம்செய்ய வேண்டும். அந்த அறம் அவர் இறக்கும்போது இறவாத் துணையாகும்.

# பனைமர அழிவைத் தடுக்க சட்டங்கள் உருவாக்கப்படும்!

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா



யாழ்.குடாநாட்டைப் பொறுத்த வரையில் பனை வளமானது. மக்களுடைய வாழ்வாதாரத்துடன் பிணைக்கப்பட்ட ஒரு விடயமாகும். யுத்த காலங்களின்போது பனை வளம் அழிக்கப்பட்டதொன்றாகவே காணப்பட்டது. இந்நிலையில் வருங் காலத்தில் தேவையற்ற விதத்தில் பனைகளை அழிக்கமுடியாத வகையில் சட்டங்களை உருவாக்கி அதனை வளர்த்தெடுக்க வேண்டுமென்று பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறினார்.

பனை அபிவிருத்திச் சபையின் ஏற்பாட்டில் சுன்னாகம் ஸ்கந்த வரோதயாக் கல்லூரியில் நடைபெற்ற பனைமரம் நாட்டு விழாவில் உரையாற்றும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் ப.சீவரட்ணம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அமைச்சர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது,

யாழ்.விவசாயப் பணிப்பாளரின் ஆலோசனையுடனும், பங்களிப்புடனும் சுமார் 15 மில்லியன் ரூபா செலவில் பயன்தரு மரங்களை குடாநாடு பூராவும் நாட்டவுள்ளோம். அத்துடன் இத்திட்டத்திற்குப் புறம்பாக பனை அபிவிருத்திச் சபையின் உதவியுடன் 5 மில்லியன் ரூபா செலவில் பனை மரங்களை நாட்டவுள்ளோம். பாத்திகளில் பனம் விதைகளைப் போட்டு அவை சிறுமரங்களாக வந்தபின் அவற்றைப் பிடுங்கி நடுகை செய்யவுள்ளோம். இச்செயற்பாட்டை நாம் ஒரு மனிதக் கடமையாகக் கொண்டு ஒவ்வொருவரும் தத்தமது பங்களிப்பைச் செய்ய வேண்டும் எனக்கேட்டுக்கொண்டார்.

பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் ப.சீவரத்தினம் தனது தலைமையுரையில், (2ம்பக்கம் பார்க்க)

# வலிகாமம் கொத்தணியின் கூட்டுறவுதின விழாவும் புலமைப்பரிசில் வழங்கல் நிகழ்வும்!

வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின கொத்தணியும் அங்கத்துவ சங்கங்களும் இணைந்து நடத்தும் ஸ்தாபகத் தலைவர் அமரர் சு.நடேசு, மறைந்த பொதுமுகாமையாளர் அமரர் க.சந்திரராசா நினைவு தினமும், 88வது சர்வதேச கூட்டுறவுதின விழாவும், புலமைப்பரிசில் வழங்கல் நிகழ்வும் கொத்தணிக் கலையரங்க மண்டபத்தில் 31-10-2010ம் திகதி நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பனை அபிவிருத்தி சபையின் தலைவர் திரு.பசுபதி-சீவரத்தினம் அவர்களும் கௌரவ விருந்தினர்களாக யாழ்.மாவட்ட கூ.அ.உ. ஆணையாளர் திரு.வி.கே.அருந்தவநாதன், கூட்டுறவு சபைத் தலைவர் திரு.இ.இராஜாராம், சமாசத் தலைவர் திரு.த.சிவலிங்கம் அவர்களும், சிறப்பு விருந்தினர்காளக மா.கூ.அ. அலுவலர் (8ம் பக்கம் பார்க்க)

# சமூக மேம்பாட்டுக் கல்வி அபிவிருத்தித் திட்டம்!

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் 2010ம் ஆண்டுக்கான சமூக மேம்பாட்டு, கல்வி அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் சுமார் 4,000 அங்கத்தவர்களுக்கும், 600ற்கு மேற்பட்ட பணியாளர்களுக்கும் பாடசாலை உபகரணம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

சமாசம் 2002ம் ஆண்டு தொடக்கம் வருடந்தோறும் இச்செயற்பாட்டை மேற்கொண்டு வருவதோடு, (8ம் பக்கம் பார்க்க)

**சிந்தனைத்துளி**

" கடமை! இதுதான் நம்முடனேயே இருக்கின்றது. நம் வாழ்க்கை முழுவதும் இருக்க வேண்டியது கடமை மட்டுமே." -அலஸ்ஸஸ்-

## கற்பகக்கரு

### ஊழியர் ஓய்வூதியம்!

யாழ் மாவட்டத்திலுள்ள பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களிலும் கொத்தணிகளிலும் சமாசத்திலும் கடமையாற்றும் கூட்டுறவுப் பணியாளர்களுக்கு ஒய்வூதியம் வழங்கும் அருமையான திட்டம் ஒன்றை யாழ். மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவ னங்களின் பணியாளர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம் அண்மையில் ஆரம்பித்து வைத்துள்ளது.

இத்திட்டத்தின் மூலம் ப.தெ.வ.கூ.நிறுவனங்களில் பணிபுரிகின்ற சுமார் அறுநூறுக்கு மேற்பட்ட ஊழியர்கள் பயன்பெறக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

அரச உத்தியோகத்தர்களுக்குத்தான் ஓய்வூதியம் என்ற நிலையிலிருந்து கூட்டுறவு ஊழியர்களுக்கும் ஓய்வூதியம் என்ற நிலைப்பாட்டில் இந்நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம் வெற்றிகண்டுள்ளது.

கூட்டுறவுத்துறையில் பல ஆயிரக்கணக்கான ஊழியர்கள் கடமையாற்றி வருகின்றபோதும் பனை தென்னை வள கூட்டுறவு நிறுவனங்களின் ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட இவ் ஓய்வூதியம் ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளமை மட்டுமல்லாமல், இலங்கையின் கூட்டுறவு இயக்கத்தின் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியதொரு விடயமாகவும் இத்திட்டம் அமைந்துள்ளது.

ஊழியர்கள் மாதந்தோறும் பெற்றுக்கொள்ளும் சம்பளத் தொகையிலிருந்து ஒரு தொகைப் பணத்தினையும் நிறுவனங்களின் கணிசமான நிதிப் பங்களிப்புடனும் இவ்ஓய்வூதியத்தை கூட்டுறவு சட்ட திட்டங்களுக்கு அமைவாக கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரின் அங்கீகாரத்தைப் பெற்று வழங்கி வருகிறார்கள்.

இத்திட்டத்துக்கான அங்கீகாரத்தை வழங்கியிருக்கின்ற கூ.அ.உ.ஆணையாளர் பின்வரும் அம்சங்களை சுட்டிக்காட்டியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

01. மாதாந்தம் பணியாளர்களினால் செலுத்தப்படும் நிதி சேமிப்பு கணக்கில் இடுவதுடன் திரளும் நிதி நிலையான வைப்புக்கு மாற்றம் செய்யப்படுதல் வேண்டும்.

02. நிலையான வைப்பிலிருந்து பெறப்படும் வட்டி வருமானம் ஓய்வூதியத் தொகைக்கேற்ப மாதாந்தம் இதற்கான நடைமுறைக் கணக்குக்கு மாற்றம் செய்யப்பட்டு இக் கணக்கின் ஊடாக ஓய்வூதியர்களின் சங்கங்களின் கிராமிய வங்கிக்கு காசோலை மூலமாக கொடுப்பனவு செய்யப்படுதல் வேண்டும்.

03. நடைமுறை விதிக்கு மாறாக கொடுப்பனவுகள் எதுவும் வழங்கப்படுதல் ஆகாது. மேலதிகமான திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டுமாயின் பொதுச்சபையின் தீர்மானத்துடன் எனது முன்னனுமதியும் பெறப்படுதல் வேண்டும்.

04. கொடுப்பனவுகள் யாவும் நடைமுறை விதிக்கு அமைய, நெறியாளர்குழுத் தீர்மானத்துடன் கூ.அ.உ. ஆணையாளரின் அங்கீகாரத்தைப்பெற்று வழங்குதல் வேண்டும்.

05. தங்கள் சங்கத்திற்கு பொறுப்பாகவுள்ள கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் காலாண்டுக்கு ஒரு தடவை இத்திட்டம் தொடர்பான முன்னேற்ற அறிக்கையிடுதல் வேண்டும்.

ஆணையாளரின் இந்நியந்தனைகளுக்கு அமைவாக இத்திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்பதையே கற்பகம் வேண்டி நிற்கின்றது.

"அங்கத்தவர்களின் ஆதரவே கற்பகத்தின் பலம்"

-ஆசிரியர்-

# பனம் பழம்

(6ம் பக்கத் தொடர்ச்சி)

இவற்றின் சீனித் தன்மை தொடர்பாக ஜான்ஸ் (1992) அவர்கள் செய்த ஆய்வு அறிக்கையின் படி சுக்குரோஸ் (6.6%), குளுக்கோஸ்(3.5%) பழவெல்லம்(3.4.%) மற்றும் வெல்லக்கூறுகள் (1.5%) ஆகும். இந்த வகையில் வருடாந்தம் 25,000 மெற்றிக்தொன் பழச்சாறு அவலமாகக் கவனிப்பாரற்று தேசிய செல்வம் அழிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. பனம் பழத்தின் வகை தொடர்பாகப் பனை அபிவிருத்திச் சபையின் விஞ்ஞான ஆராய்ச்சியாளர் பேராசிரியர் கே.தெய்வேந்திரராஜா அவர்கள் புத்தளம் பகுதியில் உள்ள ஆலன்குடா, மண்டலகுடா ஆகிய இடங்களிலிருந்து மேற்கொண்ட ஆய்வு அறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளது.

இவ் ஆய்வு 1991ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் மேற்கொள்ளப்பட்டது. சிறிய பழம் 600 கிராமிற்கு உட்பட்டது. நடுத்தரப் பழம் 600-1000 கிராமிற்கு இடைப்பட்டது. பெரிய பழம் 1கி.கிராமிற்கு மேற்பட்டது.

மேற்குறிப்பிட்ட ஆய்வு அறிக்கையின்படி பனம் பழத்தின் நிறங்கள் களியின் தன்மை, தும்பின் தன்மை, களியின் நிறம், சுவை யாவும் அறியக்கூடியதாக வுள்ளது. பழத்தின் நிறை, விதையின் நிறை, பழச்சாற்றின் நிறை என்பதனை அவதானிக்கும்போது சிறிய பழத்தில் சிறிய விதையும், பெரிய பழத்தில் பெரிய விதையும் காணப்படுகின்றது. சிறிய பழத்தில் கூடுதல் சாறும், பெரிய பழத்தில் குறைந்தளவு சாறும் பெறப்படுகின்றது.

பனையின் வளர்ச்சி விகிதங்களுக்கு அமைய பழத்தின் உருவம், அமைப்பு இவை தொடர்பான ஆய்வுகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட வேண்டும். பழங்களின் அதன் சூழல் போன்ற அமைப்புக்கள் தொடர்பான பல்வேறு விடயங்களும் ஆராயப்பட வேண்டும்.

உதாரணமாக பழங்களில் உள்ள சீனித்தன்மை, புரதம், தும்பு, கரோட்டின் எனும் ஊட்டச்சத்து முதலியவைகள் தொடர்பாகவும், தொடர்ச்சியான ஆய்வுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். இதுவரை மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் முடிவுகள் மிகவும் உற்சாகம் தரக்கூடியதாகவுள்ளது. எமது முன்னோர்கள் பயன்படுத்தியதைக் காட்டிலும் நவீன உலகின் போசாக்கு மிக்க உணவுகளில் ஒன்றாகக் காணப்படும் ஆபிரிக்க நாட்டிலுள்ள கஸ்ஸாவா எனும் போசாக்கான உணவுப் பொருட்களுக்கு ஈடாகப் பனம் பழங்கள் போசாக்கு மிக்க ஓர் முக்கிய மூலகம் என்பது அறிஞர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது எனலாம். பனம் பழத்தினை அடிப்படையாகக் கொண்ட பாரம்பரிய உற்பத்திப் பொருட்களான பனாட்டு, பாணிப் பனாட்டு, பனங்காயப் பணியாரம், பனம் பழப்புக்கை, களி என்பவற்றுடன் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய ஜாம், கோடியல், கிறீம், பனம்பானம், ஜோஸ், பாம் மலோஸ், அல்வா, ஐஸ்கிறீம், சொக்கலேட், பிஸ்கட், இனிப்புகள், பாம்ப[illegible]பசை, சம்போ போன்ற பல்வேறு உணவுப பொருட்களுடன் நோய் எதிர்ப்பு சக்திகள் வழங்கக் கூடிய மருத்துவ பயன்களும் கண்டறியப்பட்டுள்ளது.

இவ்வாறு சிறப்புமிக்க பனம் பழச்சாற்றினை பருவகாலங்களில் பதப்படுத்திச் சேமித்து வைத்து வருடம் முழுவதும் உற்பத்திப் பயன்பாட்டுக்கு பாவிக்கும் வகையிலான சேமிப்பு வழிமுறைகள் பின்வருமாறு அமையும்.

01. தோல் நீக்குதல்: துப்புரவு செய்யப்பட்ட பழங்களிலிருந்து மெதுவாக வெளித்தோல்களை அகற்றல் வேண்டும். சில வேளைகளில் தோல்களை அகற்றுவது கஸ்டமாக இருக்கும். இவ்வேளை சிறு தட்டுப் பொல்லினால் அப்பகுதியை நைய அடிப்பதன்மூலம் அல்லது சீமெந்து நிலத்தில் அல்லது துப்புரவான தட்டையான கல்லில் பழத்தினை அடிப்பதன் மூலம் தோல் நைந்து இலகுவாக உரிக்கக்கூடியதாக இருக்கும்.

02. களியெடுத்தல்: பாதுகாப்பாகத் தோல் நீக்கிய பழங்களில் விதையும் களியும் இணைந்து இருக்கும். இவை வழுவழுப்பாக இருக்கும். சாதாரணமாக நீர் கலந்து அல்லது காடி கலந்து களியைப் பிரித்துக் கொள்வார்கள். பல்வேறு உற்பத்தி நடவடிக்கைகளுக்காக சேமித்து வைக்கும் களியினை தூய நீர் கொண்டு பழத்திலிருந்து களி பிரித்தெடுக்கப்பட்டு வடி துணியினால் நன்கு வடிக்கப்படும். அதன்பின் துருப்பிடிக்காத உருக்கினால் தயாரிக்கப்பட்ட கொதிகலன் மூலம் அல்லது நீராவிக் கொதிகலன் அல்லது மண் சட்டிகள் மூலம் ஓரளவு தடிப்பாக வரும் வரை கொதிக்க வைத்து பதப்படுத்திச் சேமித்துக் கொள்ளல் வேண்டும்.

-வளரும்-

# செயற்றிறன்மிக்க கட்டுப்பாடு!

# Effective Control

இ.சுப்பிரமணியம்-B.A

நிறுவனத்தால் முன்கூட்டியே உருவாக்கப்பட்டுள்ள நியமங்களுக்கும் (Standard), அபிவிருத்தித் திட்டத்திற்கும் (Development Plan) அமைய ஒரு நிதியாண்டில் நிறுவனம் நிறைவுசெய்துள்ள தொழிற்பாட்டு வலுவுக்குமிடையே ஏதாவது வேறுபாடுகள் ஏற்பட்டால் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொண்டு நியமங்களினதும் அபிவிருத்தித் திட்டத்தினதும் நோங்கங்களை நியமங்களுக்கமைய முழுமையாக நிறைவு செய்யும் முகாமைத்துவத்தின் முக்கிய தொழிற்பாடுகளிலொன்றே கட்டுப்படுத்தலாகும். "நிறுவனத்தினால் முன்கூட்டியே உருவாக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டத்திற்கும் தீர்மானத்திற்கும் அமைய நிறுவனத்தின் செயற்பாடுகள் யாவும் தவறுகளெவையுமின்றி நிறுவனத்தின் இலக்குகளை முழுமையாக நிறைவுசெய்யும் வகையில் நடைபெறுகின்றனவாவென்பதை பரிசீலனை செய்து உறுதிப்படுத்தலே கட்டுப்படுத்தலாம்" என்று ரெனில்போல் (Tenel Pol) என்ற முகாமைத்துவ மூதறிஞர் விளக்கிக் காட்டியுள்ளார்.

**கட்டுப்படுத்தல் தொழிற்பாட்டின் ஒழுங்கு முறைகள்**

**The Procedures of Control**

நிறுவனமொன்று தனது செயற்பாடுகள் ஒவ்வொன்றும் எவ்வெவ்வழிகள் மூலம் கட்டுப்படுத்த வேண்டுமென்பது நிறுவனத்தின் சட்ட விதிகளுக்கமைய முன்கூட்டியே முடிவு செய்யப்பட வேண்டும். நிறுவனத்தின் தொழிற்பாடுகள் தொடர்பாக நிறைவு செய்யவேண்டிய இலாபங்களையும் (Profits), அனுகூலங்களையும் (Advantages) நிர்ணயித்து நிறுவுவதே "முழுமையான நியமங்களாகும்" (Complete standars) நிறுவனத்திற்குத் தேவையான நியமங்களை முன்கூட்டியே தோற்றுவித்துக்கொள்ள வேண்டும்.

நியமங்கள் உருவாக்கப்பட்டதும் நியமங்கள் மூலம் நிறுவனத்தின் தொழிற்றிறனை எவ்வாறு மதிப்பிடுவது (Confirm and Value) மதிப்பிட்டவற்றை எப்பொழுது அமுல்படுத்துவது (Whattime are implementing) போன்ற அம்சங்கள் முன்கூட்டியே தோற்றுவிக்கப்பட வேண்டும். நவீன உலகில் பெருமளவில் பெரிய நிறுவனங்கள் யாவற்றிலும் நிறுவனங்களின் நியமங்களுடன் அவற்றின் தொழிற்பாட்டு வலுவை ஒன்றுடனொன்று ஒப்புநோக்கி மதிப்பிடுதல் "மின்னணுவியல் கணினிக் கருவிகள் மூலமே" (Electronic Computer Quipments) பெருமளவில் கைக்கொள்ளப்படுவதினால் சிறப்பாகவும், சிக்கனமாகவும் மேற்கொள்ளப்பட்டு வருவது மகிழ்ச்சிக்குரியதாகும்.

நிறுவனத்தின் நியமங்களுக்கும் தொழிற்பாட்டு வலுவுக்குமிடையே பொருத்தமின்மைகளும் வேறுபாடுகளும் காணப்பட்டால் நிறுவனத்தின் நியமங்களையோ, தொழிற்பாட்டு வலுக்களையோ மாற்றியமைத்துக் கொள்ள வேண்டும்.

நிறுவனத்தின நியமங்களிலும் தொழிற்பாட்டு வலுக்களிலும் ஒருமைப்பாடுகள் காணப்பட்டால் (Unity of Standards and Functional of Institution) இரண்டிலும் மாற்றம் செய்வதை முற்றாகத் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

நிறுவனத்தின் நியமங்களிலிருந்து தொழிற்பாட்டு வலுக்கள் வேறுபட்டால் நிறுவனத்தின் அனுகூலங்களுக்கமைய இரண்டும் முற்றாக மாற்றியமைக்கப்பட வேண்டும்.

நிறுவனத்தின் நியமங்கள் மறுபடி மாற்றியமைக்கப்பட்டதும் (Reorganized) மாற்றியமைக்கப்பட்ட நியமங்களிற்கேற்ப நிறுவனத்தின் தொழிற்பாட்டு வலுவும் சீர்செய்யப்பட வேண்டும்.

நியமங்களும் தொழிற்பாட்டு வலுவும் மாற்றியமைக்கப்பட்டதும் நியமங்களும் தொழிற்பாட்டு வலுக்களும் காலத்திற்கு காலம் ஒப்புநோக்கிப் பரிசீலனை செய்து சூழ்நிலை மாற்றங்களுக்கேற்ப சீர்செய்ய வேண்டும்.

நிறுவனத்தின் உற்பத்தி மாற்றங்களுக்கும் (Productions Changes) தொழிலாளர்களின் உற்பத்தித்திறன் மாற்றங்களும் (Technical Changes of Labourers) ஏற்ப காலத்திற்கு காலம் நிறுவனத்தின் நியமங்கள் கட்டாயம் மாற்றியமைக்கப்பட வேண்டும்.

**கட்டுப்படுத்தலின் ஒழுங்குமுறைகள்**

**Procedres of Contralling**

நியமங்களை உருவாக்குதல்
↓
நிறுவனத்தின் தொழிற்பாட்டுவலு
↓
வேற்றுமைகளைக் கண்டறிதல்
↓
வேறுபாடுகளைத் தீர்த்துவைத்தல்
↓
நியமங்களை மாற்றியமைத்தல்

**கட்டுப்பாட்டின் அனுகூலங்கள்**

**The Advantages of Control**

முகாமைத்துவத்தின் கட்டுப்பாட்டுத் தொழிற்பாடு ஒரு சக்திமிக்க வலுவுள்ள (Dynamic) தொழிற்பாடாகும். கட்டுப்படுத்தல் பல முக்கியம்சங்களை (Significances) தன்னகத்தே கொண்டுள்ளது.

முகாமைத்துவத்தின் தொழிற்பாடுகள் யாவற்றுக்கும் கட்டுப்படுத்தல் உரமாகவும், அச்சாணியாகவும் அமைந்துள்ளது. முழுமையான கட்டுப்படுத்தல் இல்லாவிட்டால் முகாமைத்துவத்தின் எத்தொழிற்பாடும் வெற்றியடையாமல் படுதோல்வியடைந்துவிடும்.

நிறுவன பொதுமுகாமையாளரால் நிறுவனத்தின் பணிகள் யாவற்றையும் பூரணமாகவும் திறமையாவும் நிறைவு செய்ய முடியாது. பொதுமுகாமையாளர் தனது பணிகளில் பெருமளவான பகுதிகளை பகுதி முகாமையாளர்களுக்கும், ஏனைய உத்தியோகத்தர்களுக்கும் பகிர்ந்து ஒப்படைக்க வேண்டும். பிறரிடம் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களும் கடமைகளும் பொறுப்புக்களும் துர்ப்பிரயோகமும் தவறுகளுமின்றிச் சரிவர முழுமையாக நிறைவு செய்யப்படுகின்றனவாவென்பதை உறுதிப்படுத்த கட்டுப்பாடு முகாமைத்துவத்தின் உயிராகவுள்ளது. **(வளரும்)**

சிறுகதை

# உயிர் கலந்த உறவுகள்



குமாரும் ஷோபாவும் ஒரே வகுப்பில் ஒன்றாகப் படித்தவர்கள். அவர்களிருவரும் சிறுவயதுமுதல் இணைபிரியாத நண்பர்களாகவே இருந்துவந்தனர்.

கல்விச் செயற்பாடு முதல் விளையாட்டு, கடைக்குப் போவது, கோயிலுக்குப் போவது என எந்தச் செயலாயினும் ஒன்றித்தே செய்கின்ற அளவுக்கு இணைபிரியாத நட்பு அவர்களிடையே இருந்தது.

குமார் படிப்பில் சற்று ஆர்வம் குறைவு. ஆனால் ஷோபா அப்படியல்ல. இருவரின் குடும்பமும் பொருளாதார நிலையிலும் சரி, கல்வித் தராதரத்திலும் சரி ஒரே மாதிரியானவர்களாகத் தான் இருந்தார்கள்.

சிறுவயது முதல் பழகிவந்த அவர்களது உறவுக்கு முதல் இடையூறாக காலடி வைக்கிறாள் குமாரின் தாய் கண்மணி. அதன் பின் படிப்படியாக இருவரது குடும்பமும் உறவுகளும் சேர்ந்து இருவரது நட்புக்கும் முற்றுப்புள்ளி வைத்தார்கள்.

இருவரும் குடும்பத்தினருக்காக வெளியே பகைவர்கள் போல இருந்தாலும் உள்ளே அந்த நட்பு இன்னும் இறுக்கமாகிக் கொண்டிருந்தது. இவர்களது நட்புக்கு எதிரான உறவுகளின் அழுத்தங்கள் நட்பு என்ற நிலையிலிருந்துவந்த அவர்களை அதற்கு மேலான நெருக்கம் கொண்ட காதல் என்ற நிலைக்கு இட்டுச் சென்றது.

இருவரும் ஒருவரை ஒருவர் மனதார விரும்பத் தொடங்கினர். ஆனால் வெளிப்படுத்தவில்லை. ஒரு நாள் அவள் கல்வி நிலையத்திற்கு செல்லும் போது இடைமறித்த குமார் தன் காதலை சொல்லி விட்டான். ஷோபாவினால் எதுவுமே பேசமுடியவில்லை. தன் காதலையும் உடனேயே சொல்லிவிட அவள் மனம் துடித்தாலும் குடும்பத்தினரின் எதிர்ப்பின் காரணமாக சற்று பொறுத்திருப்போம் என நினைத்தவள் மௌனமாக அவ்விடத்திலிருந்து விலகிச் சென்றாள்.

ஷோபா தன்னை வெறுப்பதாக தவறாக நினைத்த குமார் அன்றே தன் சொந்த ஊரைவிட்டு வன்னிக்குப் புறப்பட்டான். தன்னால்தான் குமார் வன்னிக்குச் சென்றான் என அறிந்த ஷோபா வேதனையில் தூண்டில் புழுவாய்த் துடித்தாள். உணவு, கல்வி மட்டுமல்ல அவள் விரும்பும் பட்டியலில் அவ்வேளையில் குமாரைத் தவிர வேறெதுவும் இருக்கவில்லை.

மாதங்கள் சில உருண்டோட ஒருவாறாக A/L பரீட்சையை எழுதிய ஷோபா வேலை தேடி வன்னிக்குச் சென்றாள். அவள் தேடிச் சென்றது வேலையை அல்ல, குமாரைத்தான். அவளின் தேடலில் கிடைத்தது குமார் மட்டுமல்ல. வேலையும் தான். அரும்பாக இருந்த காதல் பூவாக மலர்ந்தது..

**பா.மதன[ர]தாசன்**

நாட்கள் மாதங்களாகி, மாதங்கள் வருடங்களாகியபோது திடீரென ஒருநாள் நாட்டுச்சூழ்நிலை காரணமாக குமாரையும் ஷோபாவையும் வேறு வேறு பேருக்கு திருமணம் செய்துவைப்பதற்கு அவர்களது உறவுகள் முயன்றன.

திடீரென இருவரும் சொல்லிவைத்தாற்போல ஒரே வேளையில் முடிவெடுத்தார்கள். ஒன்றுசேர்வதைத் தவிர வேறுவழி தெரியவில்லை. இருவருக்கும் ஒருவரை ஒருவர் விட்டால் சொந்தமென்று சொல்ல அங்கு யாருமேயில்லை.

இருவரது மனமும் ஒன்றுசேர்ந்ததனால் திருமணமும் எளிய முறையில் மஞ்சள் கயிற்றோடு விநாயகப் பெருமானின் வாசலில் எதுவித பிரச்சினையுமின்றி இனிதே நிறைவேறியது.

"வாழ்க பல்லாண்டு கல்யாண வாழ்க்கை நூறாண்டு.. என்ற பாடல் வரிகள் எங்கிருந்தோ காற்றலைகளில் மிதந்துவந்து இருவரது காதிலும் வாழ்த்துப் பாவாக ஒலித்தது.

*(யாவும் கற்பனையே)*

# தலைமைத்துவத்தின் அவசியம்!
# Necessity of Leadership!

*(சென்ற இதழ் தொடர்ச்சி)*

**கூட்டுறவு நிறுவனங்களின் வளர்ச்சிக்கு தலைமைத்துவத்தின் அவசியம்**

## The Necessary of Co-operative Development

எந்தவொரு நிறுவனமும் சிறந்த தலைமைத்துவமில்லாமல் சிறப்பாக வளர்ச்சியடைய முடியாது. கூட்டுறவு நிறுவனங்கள் சிறப்பாக செயற்படுவதற்கு தலைமைத்துவம் இன்றியமையாததாகும்.

உலகில் முதன் முதலாக 1844ம் ஆண்டு கூட்டுறவு இயக்கம் உருவாவதற்கும் அவை வெற்றிபெற்றமைக்கும் றொபேட் ஓவன், டாக்டர் வில்லியம் கிங், றொச்டோல் முன்னோடிகள் போன்றோரின் தலைமைத்துவ வலுவே மூலகாரணமாக இருந்தது.

கூட்டுறவு அமைப்புக்கள் சீரும் சிறப்புமாக இயங்குவதற்கு அதன் தலைமைத்துவத்தின் சிறப்பே மூலவித்தாக அமைந்துள்ளது. எமது நாட்டில் பல கூட்டுறவு அமைப்புக்கள் பலவீனமாக செயற்படுவதற்கு சிறந்த தலைமைத்துமின்மையே மூலகாரணமாகும். இச்சங்கங்கள் சிறப்பாக இயங்க சிறந்த தலைமைத்துவம் இன்றியமையாததாகும்.

இன்று உலகமெங்கும் நிதிப் பலத்துடன் வீறுநடைபோடும் பலம் பொருந்திய முதலாளித்துவ நிறுவனங்களுடன் வெற்றிகரமாக போட்டியிட்டு அங்கத்தவர்களின் மனித நேயத் தேவைகளை இலகுவில் நிறைவு செய்ய கூட்டுறவுத்துறை சிறந்த மார்க்கமாகும். இதனை வழிநடத்த உண்மைத் தலைமைத்துவம் அவசியமாகும்.

கூட்டுறவு நிறுவனங்களை கூட்டுறவுக் கொள்கைகளுக்கும் பண்புகளுக்கும் அமைய நிர்வாக சிறப்பும் நிதிப்பலமும் உள்ள நிறுவனங்களாக உருவாவதற்கு சிறந்த கூட்டுறவு தலைமைத்துவம் இன்றியமையாததாகும். சங்க தொழிற்பரப்பிலுள்ள வயது வந்த மக்களை அல்லது தாம்சார்ந்த கூட்டுறவு சங்கத்தின் தொழிற்பாடுகள் மேற்கொள்பவர்களை ஒன்றுதிரட்டி மூலாதார வளத்தை உச்சமாக பயன்படுத்தி அங்கத்தவர்களுக்கான உச்ச சேவைகளை ஊழியர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ள கூட்டுறவுத் தலைமைத்துவமும் கூட்டுறவு முகாமைத்துவமும் (Co-operative Leadership and Management) இன்றியமையாததாகும்.

கூட்டுறவுச் சங்கங்கள் கூட்டுறவுக் கொள்கைகளுக்கும் பண்புகளுக்கும் அமைய நிர்வாகச் சிறப்பும் சொந்த நிதிப் பலமும் உள்ள நிறுவனங்களாக உருவாகுவதற்கு சிறந்த கூட்டுறவுத் தலைமைத்துவம் இன்றியமையாததாகும். கூட்டுறவுச் சங்கங்கள் அங்கத்தவர்களுக்கு நேர்மையான மனித நேயம் மிக்க உயர்ந்த சேவைகளை வழங்கவும், கூட்டுறவு சங்கங்களை நட்டமின்றி இலாபகரமாக செயற்படுத்தவும் சிறந்த தலைமைத்துவம் இன்றியமையாததாகும்.

அங்கத்தவர்களது கல்வியிலும் அவர்களது பிள்ளைகளினது கல்வியிலும் பாலர் கல்வியிலும் முக்கிய கவனமெடுத்து அவர்களது ஆரம்பக் கல்வியை மேம் படுத்துவதோடு, மகளிர் பயிற்சி நிலையங்களை உருவாக்கி அவர்களுக்கு சுயதொழில் பயிற்சி போதித்து அவர்களை பொருளாதார பலம் மிக்கவர்களாக ஆக்குவதற்கு சிறந்த கூட்டுறவு தலைமைத் துவம் அவசியமாகும்.

கூட்டுறவுப் பணியாளர்கள், அங்கத்தவர்கள், அவர் சார்ந்தவர்களது கல்வி, சுகாதாரம், கலை, கலாச்சாரம் போன்றவற்றை அபிவிருத்தி செய்வதற்கு சிறந்த திட்டங்களை உருவாக்கி நடைமுறைப் படுத்த சிறந்த கூட்டுறவுத் தலைமைத்துவம் இன்றியமையாததாகும்.

கூட்டுறவுச் சங்கங்கள் சிறந்த தீர்மானங்களை எடுத்து அவற்றை நடைமுறைப்படுத்தி வெற்றிகரமாக செயற்படுத்த சங்க உபவிதி , நடைமுறைவிதி ஆகியவற்றுக்கு அமைவாக வரவு-செலவுத் திட்டம், அபிவிருத்தித் திட்டம் ஆகியவற்றை பொதுச்சபைக்கு சமர்ப்பித்து உரிய அனுமதியை பெற்றுக்கொள்வதற்கு சிறந்த கூட்டுறவுத் தலைமைத்துவம் அவசியமாகும்.

– முற்றும் –



# பேச்சு

நவரசக்கதை

—ஷர்மி—

சிந்தனாபுரி நாட்டை சிறப்பாக ஆட்சி செய்து வந்தான் வித்யாதரன். வேட்டையாடுவதில் அவனுக்கு மிகவும் விருப்பம்.

ஒருநாள் அரசன் வேட்டைக்குச் சென்றான். அமைச்சரும், சேவகன் ஒருவனும் அரசன் கூட சென்றனர். அடர்ந்த மரங்கள் நிறைந்த அந்தக் காட்டில், ஒரு புலியை விரட்டிக் கொண்டு போனான் அரசன். அமைச்சரும், சேவகனும் பின்னாலேயே ஓடி வந்தனர்.

புலி அதிக வேகத்துடன் ஓடி, ஒரு புதருக்குள் மறைந்து கொண்டது. புலியை விரட்டிப்போன அரசன் ஏதோ ஒரு பாதையில் சென்று திக்குத் தெரியாமல் விழித்தான். அரசனின் பின்னால் ஓடிவந்த அமைச்சர், சேவகன் ஆகியோரும் வழி தவறிப் போனார்கள்.

மூவரும் அந்தக் காட்டில் வெவ்வேறு திசைகளில் இருந்தார்கள். ஓரவரையொருவர் தேடி காட்டை சுற்றிச் சுற்றி வந்தனர்.

அந்தக் காட்டில் ஓர் ஓலைக்குடிசை இருந்தது. அதில் பார்வையற்ற ஒரு முனிவர் அமர்ந்திருந்தார்.

அரசனையும், அமைச்சரையும் தேடிக்கொண்டு வந்த சேவகன் அந்தக் குடிசைக்கு வந்தான். அங்கிருந்த முனிவரைப் பார்த்து,

"ஏய் கிழவா! இந்தப் பக்கம் யாராவது வந்தார்களா?" என்று கேட்டான். அப்போது முனிவரின் கண்களைப் பார்த்த அவன்,

"அட, இவன் குருடன்" என்று சொல்லிவிட்டு வெளியேறினான். அடுத்து அமைச்சர் அந்தக் குடிசைக்கு வந்தார். முனிவரைப் பார்த்து, "ஐயா, பெரியவரே, இந்தப் பக்கம் யாரேனும் வந்தார்களா?" என்று வினா எழுப்ப, "யாரோ ஒருவர் வந்தார், இதே கேள்வியை கேட்டார். நான் பார்க்கவில்லை என்று சொன்னதும் போய்விட்டார்" என்றார் முனிவர்.

"மிகவும் நன்றி முனிவரே!" என்று கூறிவிட்டு அமைச்சர் குடிசையைவிட்டு வெளியேறினார். சிறிது நேரம் கழித்து அரசன் வந்தான்.

"அருள்மிகுந்த முனிவரே! வணக்கம். வேட்டைக்கு வந்த இடத்தில் வழிதவறி விட்டேன். என்னைத் தேடி இங்கு யாராவது வந்தார்களா?" என்றான்.

"ஆமாம் அரசே! உங்களுடைய அமைச்சரும், சேவகனும் சிறிது நேரத்திற்கு முன் உங்களைத்தேடி வந்து சென்றார்கள்" என்று கூறினார் முனிவர்.

"உங்கள் உதவிக்கு மிகவும் நன்றி. அவர்கள் அருகில்தான் போய்க் கொண்டிருப்பார்கள், அவர்களை நான் சந்திக்க வேண்டும், புறப்படுகிறேன்"

என்று சொல்லிவிட்டு அவசர அவசரமாய்க் கிளம்பினான்.

சிறிது நேரத்தில் ஓரிடத்தில் மூவரும் சந்தித்துக் கொண்டார்கள்.

முனிவரைச் சந்தித்ததைப் பற்றிக் கூறினான் அரசன். "அவர் குருடர் ஆயிற்றே....! நான் சேவகன், இவர் அமைச்சர், நீங்கள் அரசன் என்பது அவருக்கு எப்படித் தெரிந்தது?" என்று கேட்டான் சேவகன். விடையை அறிந்துகொள்வதற்காக மூன்றுபேரும் முனிவரிடம் வந்தனர்.

"முனிவரே! உங்களுக்கோ கண்பார்வை இல்லை. நாங்கள் அரசன், அமைச்சர், சேவகன் என்பது உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டார் அமைச்சர்.

"உங்கள் பேச்சிலிருந்து யார் எப்படிப்பட்டவர்கள் என்பதைப் புரிந்து கொண்டேன்" என்றார் முனிவர். ஒருவருடைய பேச்சை வைத்தே அவர் எப்படிப்பட்டவர் என தீர்மானிக்க முடியும் என்பதை மூவரும் உணர்ந்துகொண்டனர்.

# புற்றுநோய், இதய நோயை தடுக்கும் கருஞ்சிவப்பு தக்காளி!



புற்றுநோய் மற்றும் இதய நோயிலிருந்து பாதுகாப்பளித்து வாழ்நாளை அதிகரிக்கும் கருஞ்சிவப்பு தக்காளியை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். தாவரங்கள் அவற்றில் உள்ள இரசாயனங்கள் நோய் எதிர்ப்புக் குணங்கள் குறித்து ஆராய புளோரா என்ற அமைப்பு தொடக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியம் தொடக்கியுள்ள இந்த புளோரா திட்டத்தின்கீழ் ஐரோப்பிய மையங்கள் மற்றும் பிரிட்டனின் நார்விச்சில் உள்ள ஜான் இன்னஸ் மையம் இணைந்து கருஞ்சிவப்பு தக்காளியை உருவாக்கி உள்ளனர். தோட்டத்தில் வளர்க்கப்படும் செடியின் இரண்டு வகை ஜீன்களை பிரித்தெடுத்து கருஞ்சிவப்பு தக்காளி உருவாக்கப்பட்டுள்ளது.

பி 53 என்ற ஜீனில் குறைபாடுகள் இருந்தால் புற்றுநோய் மற்றும் இதய நோய் ஏற்படும். இந்தக் குறைபாடு உள்ள எலிகளிடம் பரிசோதித்ததில் கருஞ்சிவப்பு தக்காளி புற்றுநோய் மற்றும் இதய நோய்களை எதிர்க்கிறது என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்தக் குறைபாடுகள் உள்ள எலிகள் மூன்று விதமாகப் பிரிக்கப்பட்டன. ஒரு பிரிவு எலிகளுக்கு சாதாரண உணவு அளிக்கப்பட்டது. இன்னொரு பிரிவு எலிகளுக்கு 10சதவீதம் சிவப்பு நிறத்தக்காளி பவுடர் உணவாக அளிக்கப்பட்டது. மூன்றாவது பிரிவு எலிகளுக்கு 10 சதவீதம் கருஞ்சிவப்புத் தக்காளி பவுடர் அளிக்கப் பட்டது.

சாதாரண மற்றும் சிவப்பு தக்காளி உணவு உட்கொண்டு வந்த எலிகளின் வாழ்நாள் 142 நாட்களில் முடிந்தது. ஆனால், கருஞ்சிவ்பு தக்காளியை உணவாகச் சாப்பிட்டு வந்த எலிகளின் வாழ்நாள் 182 நாட்களாக நீடித்தது. புற்றுநோய் மற்றும் இதயநோய் தாக்கினாலும் கருஞ்சிவப்பு நிறத் தக்காளி வாழ்நாளை அதிகரிக்கும் என்பது இதன்மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால், எந்தவிதமான காரணிகள் புற்றுநோயை தடுக்கின்றன என்பது துல்லியமாகக் கண்டறியப்படவில்லை. கருஞ்சிவப்பு தக்காளியின் மருத்துவ இரசாயனக் குணம் குறித்த அடுத்த கட்டச் சோதனைக்கு விஞ்ஞானிகள் தயாராகி வருகின்றனர். மனிதர்களிடம் இதனை பரிசோதிக்க நீண்ட காலம் பிடிக்கும் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## மற்றவர் மதிப்பபைப்பெற சில யோசனைகள்!

பா.மதனரூபி

- இனிமையற்ற / எதிர்மறையான வார்த்தைகளைத் தவிருங்கள்.
- பொறுமையுடன் அணுகுங்கள்.
- சேவை மனப்பான்மை.
- கொடுத்த வாக்குறுதியை காப்பாற்றுங்கள்.
- உங்களைப் பாதிக்கும் விடயங்களில் அதிக கவனம் செலுத்துங்கள்.
- பிரதிபலன் பாராது நேசியுங்கள்.
- மற்றவர் மீது நம்பிக்கை வையுங்கள்.
- மற்றவர்களை புரிந்துகொள்ளுங்கள்.
- மற்றவர்களை மனம்திறந்து பாராட்டுங்கள்.
- காயப்படுத்துபவரை காயப்படுத்தாதிருங்கள்.
- தவறுகளுக்கு வெளிப்படையாக மன்னிப்பு கோருதல்.

## அரைக்கும் இயந்திரம் அன்பளிப்பு!

பனை வள நிறுவனங்களினால் உருவாக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டுவரும் சித்த வைத்திய கூ.சங்கத்திற்கு ரூபா 3லட்சத்து 40 ஆயிரம் பெறுமதியான அரைக்கும் இயந்திரம் ஒன்று அரசினால் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளதாக சங்கத்தின் முகாமைப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

# பனம்பழம்

பனம்பழ பருவகாலம் என்பது ஆவணி முதல் ஐப்பசி வரை மரங்களிலிருந்து நன்கு கனிந்து முகிழ்விட்ட பழங்கள் விழும் காலமாகும். இதனை "தொப்பென்று விழுந்தான் தொப்பி கழன்றான்" என்பது விடுகதை. இக்காலங்களில் விழும் பனம் பழங்களைச் சேகரித்து அதிலிருந்து களியினைப் பெற்று பல்வேறு உற்பத்திகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் பல்வேறு உற்பத்திகளுக்கு மூலப்பொருளாகவும் பயன்படுத்தப்படுகின்றது. ஔவையாரினால் "தேம்படு பனை" என அழைப்பதற்கு உணவுகளின் சிறப்புக் காரணமாகின்றது. பனம்பழம் ஒற்றை விதைப்பழம், இரட்டை விதைப்பழம், முக்காளிப் பழம், அரிதாக நான்காலிப்பழம் (நான்கு விதையுள்ளது) பழமும் பெறப்படும். பெண்பனை மரங்களில் வெளிநீடமாகத் தோன்றிய பாளைகளில் (பூந்துணர்களில்) தோன்றும் குரும்பைகள் வளர்ந்து நுங்காகவும் அதன்பின் பழமாகவும் மாறுகின்றது. "காகம் இருக்க பனம்பழம் விழுந்தது" என்பது கிராமிய வழக்கம். பழுத்த பழம் எப்போதும் விழும் நிலையிலிருக்கும்போது அச்சமயம் காகம் அதில் உட்காரப்போக அது உடனே விழுந்துவிடுவதை அவதானித்துக் கூறிய கூற்றாகும். பனம்பழத்தின் வெளித்தோல்கள் மிகவும் தடித்த நார்த் தோலினாலும், நடுவில் கடினமான அதற்கும் கவசமுடைய விதையினாலும் ஆனது. இச்சதைப்பகுதி பெரும்பாலும் மஞ்சள், செம்மஞ்சள் நிறத்தில் காணப்படும். இதனை நீர்கொண்டு பிழியும் போது சாறு பெறப்படுகின்றது. இதனைக் களி எனவும் அழைப்பர். களி ஓர் பிரதான உணவாகப் பயன்படுகின்றது. பனம்பழத்தினைச் சுட்டும், காடிசேர்த்தும் நேரடியாகச் சாப்பிடுவார்கள். மிகவும் இனிமையாகவும் சுவையாகவும் இருக்கும். இதனை எமது முன்னோர்கள் தமது ஒருநேர உணவாக உண்டு வந்துள்ளார்கள். பனம்பழத்தின் சுவை, மணம், களியின் தன்மை யாவற்றையும் கருத்தில் கொண்டு பழத்தினை தோரை, பருப்பை, செருக்கலி, காறலி, தேனி, பூமணத்தி எனப் பெரியோர்கள் வகைப்படுத்திக் கூறியுள்ளார்கள். தற்கால ஆய்வாளர்கள் பனம்பழத்தினை 12 வகையாக பிரித்து ஆய்வு செய்துள்ளார்கள்.

ஒவ்வொரு வகைப்பழமும் உற்று நோக்கும்போது வெவ்வேறு சுவை தரக்கூடியதாகும். அதன் மணமும் வேறு



பட்டுக் காணப்படும். ஒரு மரத்திலிருந்து ஏறக்குறைய 50-80 வரையான பழங்கள் பெறலாம். ஒரு பழத்தின் மொத்த நிறையில் 2/3 அளவு விதையும், தோலும், தும்புமாகும். மிகுதி 1.3 பகுதி தடிப்பான களியுமாகும். இக்களியில் 26% திண்மப் பொருட்களும் மிகுதி திரவப் பொருளுமாகும்.

## சீக்காய் பயன்பாடு

தமிழகத்தில் பனம்பழம் நன்கு பழுத்து விழுவதற்கு முன்பாக பழுத்த சீக்காய்ப் பருவம் என அழைப்பர். இப்பருவத்தில் மரத்திலிருந்து வெட்டி கயிறு மூலம் கீழே இறக்கிக் காய்களை கூரிய கத்தியினால் குலையிலிருந்து பிரிப்பார்கள். ஒவ்வொரு காயினதும் விதைப் பகுதியினை விட்டுவிட்டுச் சுற்றியுள்ள சதைப் பாகத்தை மூன்று பாகமாக அறுத்தெடுக்கிறார்கள். ஒரு பழத்தில் சராசரி ஒரு கிலோவும் அதற்குக் குறைவாகவும் இருக்கும். பழத்துண்டுகளை சிறிதளவு நீர்விட்டு அவித்து "கொளக்கட்டை" என விற்பார்கள். அவிக்காமலும் விற்பனை செய்வார்கள். இதனை அவியாத நிலையில் "பச்சைக் கொளக்கட்டை" எனவும், "அவித்த கொளக்கட்டை" எனவும் அழைப்பர். இனிப்புக்குறைந்த கொளக்கட்டை கிடைக்கும். இதனை "மோர்க்காய்" என அழைப்பர். இதனை அவிக்கும்போது சிறிது பனை வெல்லத்தினை சேர்த்து அவிக்க வேண்டும். அப்பொழுதுதான் அது ருசியுள்ளதாக மாறும். இது ஏழைகளின் சுவையுணவாகப் பாவிக்கிறார்கள். யாழ்.மாவட்டத்தில் இந் நடைமுறை இல்லை. ஆயினும் இவ்வாறு பெறப் படும் காய்களை மேல் தோலினை அகற்றிவிட்டு சிறிது சிறிதாகச் சீவி ஆடு, மாடுகளுக்குத் தீவனமாகப் பயன்படுத்துவார்கள். குறிப்பாக கிடாய் (ஆண் ஆடுகள்) ஆடுகள் நன்கு கொழுத்து வளர்வதற்கும் குட்டி ஈன்ற ஆடுகள், கன்றுபோட்ட மாடுகள் கூடுதல் பால் கறப்பதற்காகவும் விசேடமாகப் பயன்படுத்துவார்கள். இது நல்ல கூடுதல் மணமும் சுவையுமுடையதாகும். இதனைச் "சேர்வை" என்று யாழ். மக்கள் சொல்வார்கள்.

## பழம் தெரிதல்

பருவ காலங்களில் கனிந்து விழும் பழங்களைச் சேகரித்து வைப்பார்கள். உற்பத்தித் தேவைக்கு பழங்களை எடுக்கும்போது நன்கு கனி[illegible]யுள்ள திரண்ட தோற்றமுடைய பூச்சி, புழுக்கள், அணில்கள் போன்றவை காயப்படுத்தாத பழங்களைத் தெரிவு செய்தல் வேண்டும். அத்துடன் பழங்கள் புளிப்படையாததாகவும் இருத்தல் வேண்டும்.

## சுத்தம் செய்தல்

தெரிவுசெய்யப்பட்ட பழங்களை நன்கு தூய நீரினால் கழுவி துப்புரவுபடுத்துவதுடன் களியை எடுப்பதற்குப் பயன்படுத்தப்படும் சகல வடி, துணி வகைகள் உட்பட துப்புரவாகக் கழுவிச் சுத்தம் செய்து உலர்ந்ததாக இருத்தல் வேண்டும்.

யாழ்.மாவட்டத்தில் பிரதானமாக கறுப்பு, சிவப்பு ஆகிய பிரதான இரு நிறங்களில் பழங்கள் காணப்படும். ஆனால் புத்தளம் பகுதிகளில் உள்ள ஆலன்குடா, மண்டலகுடா ஆகிய பிரதேசங்களிலிருந்து பெறப்பட்ட பழங்களை ஆய்வு செய்ததில் 12 வகையான பழங்களை இனங் கண்டுள்ளனர். யாழ்.மாவட்டத்தில் வடமராட்சி, தீவுப்பகுதிகளில் இவ்வாறான வகைப் பழங்களை அரிதாகக் காணக்கூடியதாகவுள்ளது.

01. பழங்களின் நிறங்கள் கறுப்பு, சிவப்பு, மஞ்சள், செம்மஞ்சள், இளஞ் சிவப்பு நிறங்களில் காணப் படுகிறது.

02. களியின் நிறம் வெளிர்மஞ்சள், மஞ்சள், கடும்மஞ்சள், தோடம்பழ நிறம், கடும் தோடம்பழ நிறம்.

03. களியின் தன்மை மென்மையானதும் தும்புடன் கூடியதும்.

04. சுவை இனிப்புச்சுவை, காறலுடன் கூடிய இனிப்பு.

-2ம் பக்கம் பார்க்க-

# இனியொரு விதி செய்வோம்!

கூட்டுறவு!
மானிட வாழ்வின் மேம்பாட்டுக்காக
மானிட வர்க்கத்தால் உருவாக்கப்பட்ட
மனிதநேய அமையம்-அதனால்தான்
கூட்டுறவின் இறுதிப் பெறுமானம்
இலாப-நட்டக் கணக்கைவிட
மனிதநேயக் கணக்கால் அளவிடப்படுகிறது!

விழுந்து கிடப்போரைத் தூக்கிவிடுதல்
மானுட தர்மம்-வாழ்வில்
நலிந்து கிடப்போரைத் தூக்கி விடுதல்
கூட்டுறவின் தர்மம்
கூட்டுறவு விருட்சத்துக்கு
கோடிக்கணக்கில் விழுதுகளுண்டு
அத்தனை விழுதுகளும் அயராதுழைப்பது-வாழ்வில்
உயராதிருப்போரை உயர்த்தி விடுவதற்கே!

கூட்டுறவு என்பது
ஒன்றுபடல் என்பதன் ஒட்டுமொத்தத் திரட்சி
வரட்சியற்ற வாழ்வியலும்
புரட்சிகர முன்னேற்றமும்
மகிழ்ச்சி பொங்கும் முடிவிலியும்
கூட்டுறவில் மட்டுமே உண்டு!
கூட்டுறவு என்பது எல்லோரையும்
இலக்கி நோக்கி இழுத்துச் செல்லும்
ரயிலைப்போன்றது-இதில் மட்டும்தான்
பில்கேட்சின் பேரனும்
பிளாட்பாரத்து பிச்சைக்காரனும்
ஒன்றாய்ப் பயணம் செய்யலாம்.

கூட்டுறவு என்கின்ற "கூட்சு" வண்டி
மெருகேற்றப்பட்டு மின்சார வண்டியாக்கப்பட்டுள்ளது-அது
நாட்டுயர்வு என்கின்ற இலக்கு நோக்கி
நகர்ந்து செல்கிறது படுவேகமாக
விசயம் தெரிந்தவர்கள்
முண்டியடித்து ஏறிக்கொள்வர்
விபரம் புரியாதோர் விலகி நின்று
வேடிக்கை பார்ப்பர்

88 ஆண்டுகளாக எங்களால்
இழுக்கப்படும் கூட்டுறவுத் தேர்
வசந்த மண்டபம் வரை வந்தாயிற்று
வடம் பிடித்தவர்கள் வாழ்வில் இப்போ
வசந்தம் வீசுகிறது
விருட்சத்தைத் தாங்கிய விழுதுகளுக்கும்
விருட்சத்தின் வீரியம் வந்தாயிற்று
இனி வெளிச்சம் தேவையில்லை
நாட்டின் தேசியக்கொடிக்கு நிகராய்
எங்கள் கூட்டுறவுக் கொடியும்
பட்டொளி வீசிப் பறக்கும் காலம் வந்துளது!

இதுநாள்வரை நாங்கள்
தமிழர், சிங்களர், பறங்கியர்
எனப்பேதங்கள் பேசியே அனைத்தையும்
பாழாக்கிக் கொண்டோம் என்பதால்
இனியொரு விதி செய்வோம்
பேதங்கள் பேசுவதை விடுத்து
நாமெல்லாம் "கூட்டுறவாளர்கள்" என
உரக்கச் சொல்வோம்
எங்கள் நெஞ்சு நிமிரும்
வாழ்வு சிறக்கும்
நாடு நலம்பெறும்
கூட்டுறவு வளப்படுத்தும்!

-தே.யோ.தவராஜா-

# கற்பகதருவாலே வளம் பெறுவோம்!

பணிசெய்யும் ஊழியர்கள் வாழ்வொளிர
பகலவன்போல் உதித்த நலன்புரிக் கூட்டுறவே!
சதி பல வென்றிங்கு தரணியில் தோன்றி நிற்கும்
சளையாது போராடி உரமான கூட்டுறவே
பனைவளம் சார்ந்து நிற்கும் பணியாளர்கள் நலன்பெறவே
பாங்குடனே சேவை செய்ய நலத்திட்டம்தான் வகுத்து
ஓய்வுக்கால வேளையிலும் ஊதியத்தைப் பெற்றிடவே
ஒப்பற்ற சேவையினால் உதித்திட்ட ஓய்வூதியம்
திட்டங்கள் பல வகுத்து திறனான செயல்தொடுத்து
திறன்காணும் நம்மவர்கள் ஒற்றுமையின் பலம்கொண்டு
எதிர்காலம் நம்மவர்க்காய் ஏற்றம் காணும் என்றெண்ணி
அதிகாலை வேளையிலும் விழித்திருந்து சேவை செய்வோம்
புனிதமான கொள்கையினால் உயர்ந்து நின்று
மகுட வாக்கியங்கள் பல உரைக்கும்
கூட்டுறவை காலத்தால் அழியாது காத்திருப்போம்
கற்பக தருவாலே வளம்பெறுவோம்

-வல்லை வாசன், அச்சுவேலி-

# கனவுகள்!

இன்பச் சிறகுகள் விரிய
இன்பக் கனவுகள் நனவாக
எண்ணம் யாவும் சிறகடிக்க
எண்ணிக் கனவு காண்கையிலே
கனவுகள் யாவும் நனவானால்
சிட்டாய் பறக்கும் எம்முள்ளம்
பட்டாம் பூச்சியாய் பறந்திடுமே
சின்னக் கையில் தவழ்ந்தாலும்
சிரிப்புச் சுவையும் தந்திடுமே
அந்தக் கனவு நனவானால்
என்றும் மகிழ்ச்சிக் களிப்புடன்
என்றும் வாழ்வை களித்திடலாம்!

செல்வி
ஜெனோஷா சிவகுமார்

# வெள்ளம்!

*கொட்டும் மழை தரும் வெள்ளம்*
*கொடிய வெப்பம் தணிப்பது திண்ணம்*
*பள்ளத்தில் தங்கிடு வெள்ளம்*
*பாதகம் செய்வது திண்ணம்*
*ஏரியில் விழுகின்ற வெள்ளம்*
*ஏழ்மையைப் போக்குதல் திண்ணம்*
*வீதியில் தேங்கிடும் வெள்ளம்*
*வீம்புக்கு இழுப்பது திண்ணம்*
*கடலுடன் சேர்ந்திடும் வெள்ளம்*
*கடல் வளம் பெருக்குதல் திண்ணம்*
*பூமிக்குள் சென்றிடும் வெள்ளம்*
*புது ஊற்றினைத் தருவது திண்ணம்*
*எல்லை இல்லாத வெள்ளம்*
*பல தொல்லைகள் தருவது திண்ணம்!*

-இ.காந்தன்-

# கருணை மனு!

**கவலைகளையும் கஸ்ரங்களையும்**
**தாங்கமுடியாத என் இதயம்**
**விதியை நினைத்து விழி வழியே**
**நீரைச் சிந்துகின்றது**
**எனக்கு அழுவதற்கு மட்டுமே**
**சுதந்திரம் உள்ளது-யாரும்**
**ஆறுதல் சொல்கின்றேன் என்றால்**
**அதற்கும் தடைவிதிக்காதீர்கள்!**

-செல்வி பா.மதனரூபி-

## கவியின்பம்

**பனைமர... 1ம் பக்க தொடர்ச்சி**

வடக்குக் கிழக்கு மாகாணத்தின் தேசிய பொருளாதாரமாக இருக்கக் கூடிய பனை வளத்தை நாம் பேணிப்பாதுகாக்க வேண்டும். பனை வளத்திலிருந்து முழுமையான பயனைப் பெறுவதற்கு வேண்டிய உதவிகளையும் ஒத்துழைப்புக்களையும் அமைச்சரிடம் இருந்து எதிர்பார்க்கிறோம் என்று கூறிய அவர், இதனைக் கட்டியெழுப்புவதில் எனக்கு நம்பிக்கை உண்டு என்று கூறினார்.

இந்நிகழ்வில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அதிபர் ஆறு திருமுருகன், சமாசத் தலைவர் த.சிவலிங்கம், வலிகாமம் கொத்தணித் தலைவர் க.மெய்யழகன், யாழ்.பிரதி விவசாயப் பணிப் பாளர் எஸ்.சிவகுமார், பனை அபிவிருத்திச் சபை அதிகாரிகளும் உரையாற்றினார்கள்.

**வலிகா..... 1ம் பக்க தொடர்ச்சி**

திரு.த.பத்மானந்தன், தலைமைக் காரியாலய கூ.பரிசோதகர் திரு. இ.விஜயமோகனராஜா, யா.மா.கூ. பணியாளர் நலநோன்பு கூ.சங்க தலைவர் கா.சிவஞானம், யா.மா. ப.தெ.வ.அ.கூ.நி.பணியாளர் நலன் புரிக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு.க.குணரத்தினம் அவர்களும் கலந்துகொள்ளவுள்ளதாக கொத்தணி வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்நிகழ்வில் உறுப்புரிமை பெற்ற சங்கங்களின் ஓய்வுபெற்ற அங்கத்தவர்கள், பணியாளர்கள் கௌரவிப்பும், சிறந்த அங்கத்தவர், பணியாளர் கௌரவிப்பும், 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற அங்கத்தவர், பணியாளர் பிள்ளைகளுக்கு பரிசில் வழங்கலும், சிறந்த சங்கத்திற்கான பரிசில் வழங்கல் நிகழ்வும் நடைபெறவுள்ளது. இந் நிகழ்வானது கொத்தணியினால் வருடாந்தம் நடத்தப்பட்டு வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

**சமூக..... 1ம் பக்க தொடர்ச்சி**

சிறந்த அங்கத்தவர்களுக்கு தங்கப் பதக்கம் வழங்கிக் கௌரவிப்பதோடு, அங்கத்தவர், பணியாளர்கள் பிள்ளைகளில் 5ம் ஆண்டு புலமைப்பரிசில் சித்திபெற்ற மாணவர்களுக்கு அவர்களது கல்விச் செயற்பாட்டை ஊக்குவிக்கும் நோக்கில் நிதியுதவி வழங்கிக் கௌரவித்தும் வருகின்றது.

இவ்வருடம் முதற்கட்டமாக பாடசாலை உபகரணங்கள் வழங்கப்படவுள்ளதாகவும், சமூக மேம்பாட்டு நிதிக்குழுத் தீர்மானத்தின் பின்னர் ஏனைய நலத்திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதாக சமாச பதில் பொதுமுகாமையாளர் திரு.வ.சிவகுமார் தெரிவித்துள்ளார்.





இப்போது விற்பனையில்...!

எமது பதிப்பகத்தில் கணினி மூலம் அழகிய முறையில் வடிவமைக்கப்பட்ட 12 மாதங்களுக்கும் தனித்தனியே 12 தாள்களைக் கொண்ட

2011ம் ஆண்டுக்கான வாக்கிய பஞ்சாங்க நாட்காட்டிகள்!

உங்களுக்குத் தேவையான நாட்காட்டிகளை மலிவான விலையில் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்!

அனைத்துவிதமான பதிப்பக வேலைகளையும் உங்களது இரசனைக்கேற்ப செய்து பெற்றிடலாம்!

- கணினிமூலம் அழகிய வடிவமைப்புக்கள்.
- தரமான ஓவ்செட் மெசின்மூலம் 4 வர்ணம், தனி வர்ண பதிப்புகள்.
- HP LaserJet 5200 A3 பிறின்டர் மூலம் Colour Seperation செய்து Film எடுத்தல்.
- தரமான வைன்டிங் வேலைகள்.
- Sharp Digital நிழற்படப் பிரதிகள்.

தொடர்புகளுக்கு: 021 222 5072

வடமாகாண ப.தெ.வ.அ.கூ.ச.சமாசம்
52, சோமசுந்தரம் லேன், சுண்டுக்குளி.

சமாசப் பதிப்பகம்
499, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை சமாசப் பதிப்பகத்தினால் அச்சிடப்பட்டு இல.52, சோமசுந்தரம் வீதி, சுண்டிக்குளியில் உள்ள வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் 2010ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் வெளியிடப்பட்டது.